உ
சிவமயம்



சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும்
கனடாவை வதிவிடமாகவும் கொண்டவரும்
அமரத்துவம் அடைந்தவருமாகிய

# அமரர். உயர்திரு. பொன்னம்பலம் பரமலிங்கம்

(ஓய்வு பெற்ற புலனாய்வுத்துறை அதிபர்)
கல்வித்திணைக்களம், கொழும்பு, இலங்கை.
அவர்களின் சிவபதப்பேறு குறிக்கும்

# நினைவு மலர்


24.02.2002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



அமரர்.

# உயர்திரு. பொன்னம்பலம் பரமலிங்கம்

அன்னைமடியில்
**08.04.1932**

ஆண்டவன் அடியில்
**20.01.2002**

## திதிவெண்பா

சீர்மிகுந்த விசுவாண்டு சேர்ந்தநலத் தைமாதப்
பூர்வபட்ச சப்தமியே புவிநீக்கி - பேர்மிகுந்த
தவப்பரம லிங்கம் சான்றகுணச் சிங்கம்
சிவன்கழலல்கள் சேர்ந்த தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் கண்கண்ட தெய்வத்துக்கு சமர்ப்பணம்

அன்பு மிகுந்தவராக, பண்பு நிறைந்தவராக,
ஒழுக்கத்தை உயிரினும் மேலாக மதித்து,
மனிதருள் மாணிக்கமாக வையத்துள்
வாழ்வாங்கு வாழ்ந்து, எங்களுக்கெல்லாம்
வழிகாட்டும் கலங்கரை விளக்கமாக விளங்கிய
எங்கள் கண்கண்ட தெய்வத்தின் நினைவாக
வெளியிடும் இந்த அன்பு மலரை அவரின்
பொன்னடிகளிற் சமர்ப்பித்துப்
பூசிக்கின்றோம்.

- குடும்பத்தினர்.

ஐயுந் தொடர்ந்து விழியும் செருகி அறிவழிந்து
மெய்யும் பொய்யாகி விடுகின்ற போதொன்று
- வேண்டுவன்யான்
செய்யுந் திருவொற்றி யூருடை யீர்திரு நீறுமிட்டுக்
கையுந் தொழப்பண்ணி ஐந்தெழுத் தோதவுங்
- கற்பியுமே

-பட்டினத்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



**விநாயகர் துதி**

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

**தேவாரம்**

முன்னநீ நல்வினைப் பயனிடை முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரி சூழ்திருவலஞ்சுழி வாணனை வாயாரப்
பன்னி யாதரித் தேத்தியும் பாடியும் வழிபடு மதனாலே
என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே யிருங் கடல் வையத்தே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவபுராணம்

திருச்சிற்றம்பலம்

தொல்லை இரும்பிறவிச் சூழும் தளைநீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவா சகம்என்னும் தேன்.

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவ னடிவாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவா ருண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவா ரோங்குவிக்குஞ் சீரோன் கழல் வெல்க
ஈச னடிபோற்றி எந்தை யடிபோற்றி
தேச னடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கு மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநந் தேவ னடிபோற்றி
ஆராத இன்பம் அருளு மலைபோற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனருளாலே அவன்றாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பணியான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய் பாம்பாகிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா நின்றவித் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென் னுள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுஅழுக்கு மூடி
மலஞ் சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆராஅமுதே அளவிலா பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமா யல்லையுமாய்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தால் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேனெம் ஐயா அரனேயோ வென்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓ வென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக் கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து

திருச்சிற்றம்பலம்

## திருவாசகச் சிறப்பு

கற்பாந்த காலங் கடவாக் கடல் கடக்கத்
தெப்பமாய் வந்தெனக்குச் சேர்ந்ததே - அப்பன்
உருவா சகங் கொண் டுரைத்த தமிழ்மாலைத்
திருவாச கம்என்னும் தேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

நானேயோ தவம் செய்தேன்
சிவாய நம எனப் பெற்றேன்
தேனாய் இன் அமுதமும் ஆய்த்
தித்திக்கும் சிவபெருமான்
தானே வந்து எனது உள்ளம் புகுந்து
அடியேற்கு அருள் செய்தான்
ஊன் ஆரம் உயிர் வாழ்க்கை
ஒறுத்து அன்றே வெறுத்திடவே.

## திருவிசைப்பா

பவளமால் வரையைப் பனிபடர்ந்த தனையதோர்
படரொளி தரு திருநீறும்
குவளை மாமலர்க் கண்ணியும் கொன்றையும் துன்று
பொற்குழற் திருச்சடையும்
திவள மாளிகை சூழ்தரு தில்லையுள்
திருநடம் புரிகின்ற
தவள வண்ணனை நினைதொறு மென்மனந்
தழன் மெழு கொக்கின்றதே.

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன் பெற்றதார் பெறுவாருலகில்
ஊரும் உலகும்கழற உளறி உமைமணவாளனுக் காட்
பாரும் விசும்புமறியும் பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே.

## திருமந்திரம்

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்த பின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே.

சிவ சிவ என்கிலர் தீவினையாளர்
சிவ சிவ என்றிடத் தீவினை மாளும்
சிவ சிவ என்றிடத் தேவரு மாவர்
சிவ சிவ என்னச் சிவகதி தானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெரியபுராணம்

கற்பனை கடந்த சோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோலம் நீடி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோம மாகும் திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடஞ் செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி.

உலகெலா முணர்ந் தோதற் கரியவன்
நிலாவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்

## திருப்புகழ்

இறவாமல் பிறவாமல் எனையாள்சற் குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.

## பட்டினத்தார் பாடல்

ஊரும் சதமல்ல உற்றார் சதமல்ல உற்றுப்பெற்ற
பேரும் சதமல்ல பெண்டிர் சதமல்ல பிள்ளைகளுக்கு
சீருஞ் சதமல்ல செல்வமும் சதமல்ல தேசத்திலே
யாருஞ் சதமல்ல நின்றால் சதங்கச்சி யேகம்பனே.

நல்லாரிணக்கமும் நின் பூசையும் நேசமும் ஞானமுமே
யல்லாது வேறுநிலையுளதோ அகமும் பொருளும்
இல்லாளுஞ் சுற்றமும் மைந்தரும் வாழ்வும் எழிலுடம்பும்
எல்லாம் வெளிமயக்கே இறைவா கச்சியேகம்பனே.

தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்ந்த ஒழுக்க சீலர்

நண்பர் திரு. பரமலிங்கம் அவர்கள் ஒரு நல்ல மனிதர். "நல்லாரைக் காண்பதுவும் நன்றே" என்றார் ஔவைப்பிராட்டியார். யானும் நல்ல மனிதரைக் காண்பதிலும் அவரோடு உரையாடுவதிலும் இன்பம் கண்டிருக்கின்றேன்.

"அகத்தின் அழகு முகத்திலே தெரியும்" என்பதற்கு அசல் சான்றாக விளங்கியவர் நண்பர். அவர் மிகுந்த அழகுள்ள ஆண்மகன். பார்த்தால் வெள்ளைக்காரனைப்போல் இருப்பார். எடுப்பான நடை. ஓர் ஆண்மகனுக்கு இருக்கவேண்டிய இலட்சணங்கள் அத்தனையையும் கொண்டு ஒரு காவிய நாயகன் போல நம்மவர் மத்தியில் பவனி வந்தார். அவரது புறத்தோற்ற அழகு உள்ளத்தின் அழகையும் உணர்த்தி நின்ற உண்மையை அவரை நன்கு அறிந்தவர்கள் உணர்வார்கள்.

> வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர் தம்
> உள்ளத் தனையது உயர்வு.

என்றார் வள்ளுவர் பெருமான். நண்பர் பரமலிங்கம் பெற்ற கல்வி, வகித்த பதவி, ஈட்டிய பொருள், பெற்ற மக்கள் முதலாய செல்வங்கள் யாவற்றிலும் தமது உள்ளத்தால் பெற்ற உயர்வே அவரது புகழுக்குக் காரணமாக விளங்கியது.

நான் எடுக்காது போனாலும் அவர் தொலைபேசி எடுப்பார். இது அவரது உன்னதமான பண்புகளில் ஒன்று. எங்கள் எல்லோரையும் தொடர்பு படுத்தும் ஓர் ஊடகமாக விளங்கிய உத்தமர் அவர். அந்த ஊடகம் இன்று ஒடிந்து போனது எமது நட்பு உலகத்துக்குப் பேரிழப்பாகும்.

நான் "தமிழர் தகவல்" சஞ்சிகையில் எழுதிவரும் கனடியக் காட்சிகளைப் படிப்பவர்கள் ஒன்றைக் கவனித்திருப்பார்கள். கட்டுரை பெரிதும் "ஹலோ" என்றே தொடங்கும். அந்த "ஹலோ" வுக்கு உரியவர் வேறுயாருமல்லர், திரு. பரமலிங்கம் அவர்களே தான். அவருடன் பேசிய பல விடயங்களையே அக்கட்டுரைகளின் கருப்பொருள் ஆக்கியுள்ளேன். அவை மட்டுமன்றி "ஞானக் கூத்து" என்ற எனது கவிதையில் வரும் சம்பவமும் அவர் வீட்டில் நிகழ்ந்ததாகவே கற்பனை செய்துள்ளேன். அவ்வளவுக்கு அவர் என் உள்ளம் கவர்ந்த கள்வனாகியவர். அதனாற்றான் போலும் அவர் காலமாகிய செய்தி என் உள்ளத்தை பிழிந்து கண்களைக் கலங்க வைத்தன.

ஓர் உந்து சக்தி உறைந்து விட்டது போன்ற உணர்வு எனக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கே இப்படியாயின் அவரது இனிய குடும்பத்துக்கு எப்படி இருக்கும் என்பதனை நினைக்கையில் கவலை இன்னும் அதிகரிக்கின்றது.

"மனம் போல மாங்கல்யம்" என்பார்கள். அவரது மனத்தைப் போன்ற மனத்துக்கேற்ற மனைவியாய் வாய்த்தவர் மகிழ். மகிழ்ச்சியான குடும்பம் அந்த மகிழ்ச்சியான இல்லத்தில் மலர்ந்த மக்கட் செல்வங்களையும் நான் நன்கு அறிவேன். தங்கமானவர்கள்.

அவர்கள் எல்லோருக்கும் எனதும் எனது குடும்பத்தினதும் ஆழ்ந்த அனுதாபங்கள்.

என் இனிய நண்பனின் ஆத்மா சாந்தியடைவதாக!.

ஓம் சிவம்.

வி. கந்தவனம்

## Our Dear Thatha

We think of you each and every day since you left us Thatha.
We can still hear you talking and laughing with us.
You are going to miss all the crazy things we do
and we miss the crazy things you do.
But most of all we miss having you with us.
We are wondering why God took you away from us.
Your loving hugs, your love for us, no one can replace you Thatha.
It feels strange writing to you and saying good bye to your photo Thatha.
We all want you back with us. So we can hug and say good bye.
We know you are in heaven now. But we still feel that you are with us.
We will never let go of all the good times and the fond memories we had.
We will all miss you Thatha!

Your loving grand Children
Sahana, Nishan, Cynthu, Nilasha.

**Loving Thoughts**
Thatha is nice.
He gives me loving hugs. Thatha is funny.
I miss you so much Thatha. We will all miss you.
Bye Thatha. Take care..... love Nishan



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Eulogy given at the funeral of the late Mr.Ponnampalm Paramalingam**
**By Aloy Ratnasingham**

Friends-

"In the midst of life we are in death"

Parting is always sad , but it is doubly so when it concerns a dear and long time friend.

Our friendship spanned over 45 years. I met him for the first time at our work - place - the Education Dept., Colombo, in the 1950's. We remained as friends till Sunday 20th of this month when death suddenly took him away from us all. Our friendship was so close, it is no exaggeration to say that we were like one mind in two bodies.

Param as we fondly called him hails from Chulipuram, met and married Mahildevi of Uduvil Girls College when we were both working at the Education Office, Jaffna. Thereafter we moved to Colombo and lived in Bambalapitiya - in close proximity to each other - Dickman's Road and St. Peters place.

Param was attached to the Assisted Schools grants section of the Education Dept., Colombo. It was at that time he was greatly sought after for students admission to prestigious Colombo schools.

He willingly helped any one who asked for assistance. From here he was transferred to the Examinations Dept. in charge of a confidential division. He retired from there and moved with his family to South Africa where his wife had a teaching assignment.

Finally like all immigrants from Sri Lanka unable to return to their own country, Param and family reached Canada - and I was too glad to welcome them in Toronto. Thus our friendship continued.

Param had a special love for his birth place. He always wanted to go and spend the last days of his life in his homeland. However illness prevented him from achieving his life long ambition.

Param was a live-wire in any gathering be it home, work place or a Seniors' picnic. His sharp wit and humour had every one around him in stitches of laughter. It can be said of Param as true to the saying - "Those who bring sunshine to the lives of others cannot keep it from them selves"

He gave his 3 children, Thayalan, Aruna and Nimie a good education and they are all professionals here in Canada and the USA.

Param wanted to be an ordinary citizen and a cheerful person and he succeeded in achieving it. Whenever he felt dull he would call his friends, at any time and from anywhere.

Param your friends, me including, will miss your calls, sometimes even in the dead of night. They were undoubtedly a pleasant disturbance.

Now our thoughts and prayers are with the family who have suffered an irreparable loss.

Finally, Param, my dear friend, good bye and

" May flights of Angels sing thee to thy rest."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***Life Lived to the full...***

*Our surroundings as we grow make us what we are throughout our lives.
The guidance, care and love mold our ways.
What I am today is the product of love, understanding, caring,
nurturing and guidance that Appa gave me as I grew.
With this, I achieved goals that I could not possibly have imagined.*

*As a little girl,
Appa would take me to my aunt's house to stay for school months.
The trip would be a blast till he slips away
and I would search and search to my dismay.
Moons go by and then he is there in front of me with hands held wide.
I run into them with all adore, bringing me home to Colombo.
He showered us with love that knew no sternness.
He was indeed a very cool Appa.
He was a favorite with all the little ones full of amusements
without any bounds.
A mighty handsome wonder with those dancing eyes.
Away I went to South Africa, happy letters, all I had.
In return, he would listen to my chatter from the tapes I sent him.
Rewind and Play, music to his ears, hour after hour.
Then came the time, all of us one big family.
All together at last during my teens.
Happy days treasured today.
Canada became our home in the last ten years.
Beautiful were the years with my beloved Appa by my side.
Alas, again I was gone to live in Boston without my Appa.
Here he preached perseverance and kept me ashore.
Spending sleepless times advocating a strong will.
Holding my hand when all things fail, O my dearest Appa, I miss you so.
Love of my life, my dearest Appa, what will I do with you no more.
In the halls of my heart, my dearest Appa, I hear the murmurs of you.
In my ears, I hear the melodious thevaram you sing into the nights.
Memories, wonderful sweet reminiscences, all I have.
Now I walk alone with tears in my eyes, hoping you would call me again
'hi darling, are you happy? For I cannot be happy if my angel is not'
'hi darling, I am going to chulipuram coming fortnight, real or not'
My precious Appa, come to me, let me fulfil your last longing
I will take you through the curves and bends of all chulipuram
Till the bull cart tires down and not let one relative go unseen
Saying 'Allo uncle' here and 'Paramaguru' there.
Tomorrow, I start without my pillar and understand you had to go.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*As I walk away tear will fall, sad I could not bid farewell.*
*Taken a flight to give my last kiss*
*and receive my Veebuthy with your frail hands.*
*I bid you Farewell with Amma by my side,*
*Anna and Acca holding my hands.*
*Love you en Appa, I will see you with God, smiling down on me*
*....endrum ungal Nimie*
*I bid you Farewell with Amma by my side,*
*Anna and Nimie holding my hands.*
*Love you en Appa, I will see you with God, smiling down on me*
*....endrum ungal Nithya*
*I bid you Farewell with Amma by my side,*
*Nithy and Nimie holding my hands.*
*Love you en Appa, I will see you with God, smiling down on me*
*...endrum ungal Niranjan.*
*Oh farewell my dearest beloved, our children by my side,*
*holding both my hands*
*With always tender thoughts of thee, my love!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் முதல் குரு

என் முதல் குரு என் அப்பா. அவரால் எனக்கு கிடைத்த சிறப்புக்கூற ஒரு புத்தகம் பத்தாது!

என்னை அன்பாகவும் என் மேல் முழு நம்பிக்கை வைத்து அதன் விளைவாக எனது தன்நம்பிக்கையை அதிகரித்து எனக்கு முழு சுதந்திரத்தையும் கொடுத்து என்னை செல்லமாக வளர்த்தவர் என் அப்பா. எங்களின் அமைதியான குடும்ப வாழ்க்கைக்கு என்னுடைய அப்பாவின் ஆதரவும் எளிமையான குணமுமே மூல காரணம்.

எனது அம்மா வெகு தூரம் வேலையாகச் சென்றுவிட, என்னுடைய அப்பா என்னை அன்பாக வளர்த்தார். ஒரு பொழுதும் கோபத்தால் கண்டித்தது கிடையாது. அன்பால் அணைத்து வளர்த்தார். என்னைப் படிப்பித்து எனக்கு கல்வியே வாழ்க்கையின் குறிக்கோளாக்கி ஆளாக்கிய தெய்வம் அவர்.....

“தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்” (வள்ளுவர் குறள்)

அந்தக் கொழும்பு வீதி வழியே வீணையை சுமை தெரியாது தூக்கிக் கொண்டு என் வீணைப் பரீட்சைகளுக்கு என்பின் நடந்து வருவீர்களே அப்பா...................

என்னை வளர்த்தது மட்டுமன்றி என்னுடைய பச்சிளம் குழந்தையை ஆறு மாதத்தில் இருந்து தூக்கி வளர்த்தீர்களே!

நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்தாலும் உங்கள் நினைவுகளால் நீங்கள் என்றும் எங்களுடன் இருப்பீர்கள் அப்பா!

## Thatha...

Thatha you are a brave man
With a giving heart, we all adore
Thatha you area sharing man
We could never ask for more
Thatha you gave me many treats
You would take me home school
But now I miss you very very much...
Love you Thatha ....Sahaana



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**A Soul Worth Remembering**

The news of the passing away of Paramalingam, better known as Paramaguru to every relation and friend, was received with great sadness not only by his family but also by relations and his large circle of friends.
Meeting Paramaguru was always an exposure to love, peace and tranquility. His only philosophy was to help anyone in need.
Paramalingam's entire public service was in the Department of Education where he has usefully helped many, from teachers to Principals of Sri Lankan schools and colleges, in innumerable ways devising solutions in intricate matters that defied human ingenuity. He retired from public services in Sri Lanka and had travelled a lot visiting relations and friends in his late life.
Paramalingam had the fortune to marry an accomplished teacher Mahildevi of Vaddukkotai in 1962 and the providential luck to produce lovely children, a son Thayalan and two daughters Aruna and Nimie, who are doing very well in life. He also had the fortune to spend a portion of his life in Transki, South Africa.
Paramalingam, as known to me had the uncanny trait to meet Ministers, Permanent Secretaries, Directors or any top-level personalities to get difficult tasks done to his advantage according to needs.
Paramalingam and I are descendants of two grandfathers who were brothers. His grandfather was named Vythilingam and my grandfather (elder) was named Ramalingam. Paramalingam kept the relationship burning bright by his typical quality of friendship and love.I have known Paramaguru as a cousin brother and friend from 1948, the year I arrived in Chulipuram from Malaysia, till his death.
Paramalingam has left a vacuum in the immediate fraternity that cannot be easily filled. Our prayer is that his wife, son and two daughters, brothers and sisters, his relations and friends will respect his quality of freindship, altruism and accept the loss with tranquility.
Let us thank God for giving us a devoted,kind father and faithful friend.
I wish Paramalingam bliss and peace in the world he is now.
Finally my wife, my daughter and family, and myself wish to express our deeply felt sadness to Mahildevi, Thayalan, Aruna and Nimie for the untimely death of a soul worth remembering ever.

M.Anandasundram
Edmonton.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**We Miss You - Paramaguru**

Mr.Paramlingam was affectionately known as Paramaguru or Param by his close associates. He was greatly loved by the family, friends and many people. We were good old friends from our school days 1945 at Victoria College, Chulipuram, Jaffna.Both of us hailed from the same village. His father was a very popular person in Chulipuram West and much loved and respected by the people. He was known as "Gnaniar: or Gnaiyar Ponnampalm because of his benevolent deeds.People looked forward for his leadership in family functions as well as village matters, and for mediation in disputes.Param too had acquired the nice qualities and easily befriended people with a smile and gave all the help he could.
While working, he was in the Education Department in Jaffna and many years in Educations Ministry, Colombo. He was of great help to many teachers and heads of schools who contacted him in their hour of need. He was very friendly and ever willing to help even at the expense of his time, leisure and money. Personally I am also indebted to him for attending to my pension papers when I took retirement and went to Nigeria.

Param was a social worker too. He took special interviews to find suitable marriage partners for youngsters both within family and outside of which I can recall a few.

Param was a globetrotter. He loved travelling and meeting people. He also had close relatives in Malaysia and fondly visited them. After his retirement, he was working in South Africa and later they migrated to Canada and had his links to the USA too.From Canada he often visited London to see his younger brother Mr.Lingam and family or nephew Mr.Moorthy and family. His last respects to Mr.Jeyasingham's (brother - in -law) wife Jeayaleshumy's funeral at EastHam, London in August 2000.

It was a shock to hear the sad news of his death.We had a long conversation lasting half an hour, over the phone only two days before his demise.He had a chat with my wife and inquired in detail about my children and my nephew Periathamby and family. He always found it a pleasure to keep in touch with his close friends and relations as often as he could. I least expected him to pass away suddently so soon leaving us all in deep despair. During his conversation two things he mentioned, come to mind.One was his desire to visit his homeland and enjoy the company of his kith and kin, and to go about in the familiar village setting amidst natural surroundings which he



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

expressed this desire to his son, he assured to take him this Easter. On hearing this Param was calm and happy . Later he spent that day very happlily with all the members of the family at their son's home.Incidentally, he had been to Chulipuram, Jaffna only a few years back and that luck on his return flight as the next day plane from Jaffna to Colombo was shot down.The other thing that he yearned for was that when he leaves the Earth, he must leave without much suffering to him or burden to anyone.He had even quoted the example of friends who had passed away peacefully.God too was very kind to him as he was always a very kind hearted and generous person .

He will be greatly missed by everyone fortunate enough to have known him, his friends, the people for whom he worked tirelessly and above all his wife Mahildevi, son Niranjan, daughters Nithy, Nimie, in-laws and his loving grandchildren.
May his soul rest in peace.

K.Muthukumarasamy
London

**In memory of my beloved friend Paramalingam**

My association with Paramalingam was from our days in Sri Lanka when we were working together. It was about twenty five years ago. I cannot forget the good days we had together.
He was always a jovial and pleasant person. We will all miss him very badly.
May his soul rest in peace.

Prof.T.Sentheyval
Papua New Guinea.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரியப்பா எங்கே?

எங்கள் மீது பாசம் கொண்ட எமதினிய பெரியப்பா எங்கே?
காலனவனன் பிரித்திட்டானோ!
சொந்த பந்தமே உயிரென ஊரே வாழ்வென தான்
பிறந்து வளர்ந்த மண்ணையே நேசித்த எங்கள் பெரியப்பா
எங்கே?
எவரிடமும் கோபம் சாதிக்காது எல்லோரிடமும் இனிமையோடு
எளிதாக பழகும் எங்கள் பெரியப்பா எங்கே?
பழகிய எல்லோர் மீதும் பாசத்தை அள்ளிக்கொட்டி கூடியிருக்கும்
எல்லோரையும் இன்பக் கடலில் ஆழ்த்திய எங்கள் பெரியப்பா எங்கே?
பெரியப்பா உங்களது வாழ்க்கை எங்கள் எல்லோருக்கும் ஓர் அழகிய
புத்தகமே - அந்தப் புத்தகம் எமக்கு புகட்டும் பாடங்கள் தான் எத்தனை!
பெரியப்பா நீங்களோ அமைதியாகச் சென்று விட்டீர்கள் ஆனால் உங்கள்
பிரிவினை ஏற்க முடியாது - தாங்க முடியாது தவிக்கும் குடும்பத்தினர்
உற்றார் உறவினர் நண்பர்கள் என எத்தனை பேர்...

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிராத்திக்கும்
பெறாமக்கள்
லண்டன்

இக் கடல் கடந்த தேசத்திலும்
எனக்கொரு தந்தை இருக்கிறாரென
இறுமாப்புடன் வந்து சேர்ந்தேன் - ஆனால்
எங்கு போனீர்கள் தெரியவில்லையே!

பழைய கதை பேசி சிரித்து மகிழலாம்
பிள்ளைப் பராயத்திலே நீங்களும் அப்பாவும்
வயல் வரப்புகளில் வீதி ஒழுங்கைகளில்
வலம் வந்ததையும் விளையாடியதையும்
சண்டைகள் பிடித்ததையும் சமாதானமானதையும்
சலிப்பில்லாமல் சித்தரித்துச் சிரிக்கச்சொல்வீர்கள்
கதை கதையாய் சொல்வீர்கள் என்றிருந்தேன் பெரியப்பா - ஆனால்
காணாமல் போய்விட்டீர்கள் என்ன அவசரம் பெரியப்பா!

பெறாமகள்
கனடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனது நண்பர் பரமலிங்கம்....

"என்றும் சிரித்த முகம் எப்பொழுதும் வேடிக்கைப் பேச்சு" உள்ளவரை ஆயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பத்தாறாம் ஆண்டு (1956) செப்ரம்பர் மாதம் இருபத்தி ஆறாம் நாள்(26) மலே வீதியிலுள்ள கல்வித் திணைக்களத்தில் முதலில் சந்தித்தோம். இரு வருடங்களின் முன்பு நண்பன் பரமலிங்கம் அரச சேவையில் சேர்ந்திருந்தார். அன்று தொடங்கியது எங்கள் நட்பு. சென்ற வருடம் (2001) நவம்பர் ஆறாம் திகதி எனது மைத்துனர் முத்துலிங்கத்துடன் சென்று சுகம் அறிந்து, ஆறுதல் கூறி விட்டு எனது வேலையை மேற்கொண்டு கனடாவை விட்டு நவம்பர் மாதம் (10) நாள் வெளியேறினேன்.

அன்று அவர் பேச்சில் இருந்து அறிந்தவை,......

இறைவன் அடி சேரவேண்டும் என்றும், யாழ்ப்பாணம் சென்று சுழிபுரத்தில் அது நடந்தால் சந்தோசம் அடைவேன் என்றும் கூறினார். அவர் ஆசை நிறை வேறவில்லை. ஆனால் அவர் விருப்பத்தை ஆண்டவன் ஏற்றுக் கொண்டார். கேள்விப்பட்டதும் நம்ப முடியவில்லை. சிறிது மனவருத்தம் இருந்தும் படுக்கையில் இல்லாமல் இறைவன் அடி சேர்தல் மேற்கத்தைய நாடுகளில் வாழ்பவர்கள் வாழ் நாட்களில் செய்த புண்ணியத்தின் பலன் என்றுதான் கூற வேண்டும்.

அன்பு, பண்பு, அறம் இம் மூன்றும் நண்பரிடம் நிறைந்து இருந்தன. நாங்கள் யாழ் கல்வித் திணைக்களத்தில் ஐந்து வருடங்களும் கொழும்பு மேல்மாகாண திணைக்களத்தில் சில வருடங்களும் ஒன்றாக வேலை செய்தோம். பின்பு நண்பன் பரீட்சைத் திணைக்களத்தில் பணியாற்றினார். இக்காலத்தில் எங்கள் இருவரையும் நன்றாக அறிந்திருந்தது ஆசிரியர் உலகம்.

எங்களுடன் காலம் சென்ற M.A. வேலுப்பிள்ளை, சிவஞான சுந்தரம், தற்பொழுது இலங்கையில் வசிக்கும் சிதம்பர நடராசா, பப்புவா நியூகினியில் வசிக்கும் செந்திவேல், கனடாவில் வசிக்கும் இரத்தினசிங்கம் ஆகியோரும் ஒன்று சேர்ந்த நண்பர்களாக இருந்தோம். யாழ் கல்வித் திணைக்களத்தில் பணிபுரியும் போது தான் ஆசிரியை "மகிழதேவியை" மணம்புரிந்தார். ஒரு மகன் இரு பெண்களுக்கு தகப்பனுமானார். கொழும்பில் வேலை செய்த போது மனைவி லேசோத்தோவிற்கு வேலை கிடைத்து சென்றார். அக்காலத்தில் பிள்ளைகளை தன்னுடன் வைத்து பாசமாய் பார்த்தார். பின்பு இளைப்பாறி பிள்ளைகளுடன் லேசோத்தோ சென்று அங்கு சிலகாலம் வசித்துவிட்டு பிறந்த நாட்டில் வசிக்க விரும்பியும் அங்கு சென்று வசிப்பது சாத்தியம் இல்லாததால் கனடா வந்து சேர்ந்தார். பிள்ளைகளின் நலன் கருதி தனது நலனையும் பார்க்காது வேலை பார்த்து வெற்றியும் கண்டார். என்னுடனும் என் மனைவி பிள்ளைகளுடனும் இடைவிடாது தொடர்பு கொள்வார். இறைவனடி சேர்ந்ததற்கு ஒரு நாள் முன்பும் தொலைபேசியில் அழைத்து அங்கு யாருமில்லாததால் தொலைபேசி பதிவுக் கருவியில் புதினப் பதிவு செய்திருந்தார். அன்புக் கணவனை இழந்து பாசமுள்ள தகப்பனை இழந்து நிற்கும் பிள்ளைகள், பேரப்பிள்ளைகளுக்கும் ஆறுதல் கூறி, நண்பர் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்போம்.

நண்பர்
இ.சாம்பசிவம்.
பப்புவா நியூகினி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A good friend

*My family members and I were immensely grieved to learn about the sudden passing away of Ponnampalam Paramalingam recently in Canada. Paramaguru as he is popularly known to his close friends and relatives has touched the hearts of many who came in contact with him, with his simplicity and commitment to lasting relationships. We both hail from the same village Chulipuram in Northern SriLanka. Growing up together and attending the same local schools until completion of secondary school education. Even as a young student he displayed characteristics that endeared him to one and all. He was honest and sincere in whatever he . did and his ever present willingness to help others even at personal sacrifice was extraordinary. His incredible capacity to continue and nurture friendships knew no bounds. Paramaguru was a frequent visitor to the medical hostel where I resided. His simplicity and sincere ways attracted many of my colleagues so much so that, most of them remained common friends to us throughout. Despite his exemplary relationships with friends and colleagues at work, his care and concern to his own family members were equally formidable. Born the oldest, he was extremely supportive of his siblings, guiding them at every turn. From Colombo Education department, he moved to the Jaffna Education Office where he remained ever so popular and was held in high esteem by the Northern Province Teaching fraternity. It was then, he got married in Vaddukoddai into a popular family closely linked to that great institution Jaffna College. His wife Mahildevi was a teacher at the Uduvil Girls School.*

*Paramaguru took early retirement from his Srilankan service and migrated to South Africa with his family. Later he settled in Canada with his family. Despite his moves at no time did he fail to keep in touch with his friends. He makes it a point to attend his friend's social functions even it meant flying out enormous distances at personal cost. His health has been failing him for a while but it hardly deterred his will and enthusiasm to continue his trademark social activities. In fact he spoke to me on the phone just a few days before the 20th. He leaves his loving wife Mahil and his beloved children Niranjan, Nithiya and Nimie.*

*Farewell my good friend; God bless you.*

*Dr Kathirgamathamby*
*London*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓர் உற்ற நண்பர்

ஒருவர் தம் வாழ்வில் எவ்வளவோ நண்பர்களைக் கொண்டிருப்பார். ஆனால் ஒரு சிலரது நட்பு மட்டுமே இறுதி வரை நீடித்திருக்கும். அப்படிப்பட்ட என் நண்பர்கள் சிலரில் அமரர் திரு. பரமலிங்கமும் ஒருவர்.

அழகான தோற்றம், நல்ல உடல்வாகு, எப்போதும் மலர்ந்த முகம் அதிலோர் புன்முறுவல், எங்கு காணினும் அன்புடன் வரவேற்று அளவளாவுதல், எல்லோருடனும் அன்பாகவும் இனிமையாகவும் பழகத் தகுந்தவர். அவர்தான் இவ்வையத்துள் எளிமையாக வாழ்வாங்கு வாழ்ந்து இன்று தெய்வத்துள் ஒருவராகிவிட்ட எம் நண்பர் அமரர் பரமலிங்கம் அவர்கள்.

அவர்களை ஐம்பதுகளில் ஒரே திணைக்களத்தில் பணியாற்றிய காலத்தில் அறியும்வாய்ப்புக் கிடைத்தது. அறிமுகம் நட்பாகத் தொடர்ந்து பின்னர் அறுபதுகளில் அயலவர்களான காலமுதல் குடும்ப நண்பர்களாகி அன்னியோன்னியமாகப் பழகினோம். சந்தர்ப்ப சூழ்நிலை காரணமாக ஏற்பட்ட இடப்பெயர்வுகளால் சிலகாலம் தொடர்பற்றுப்போன எம்மை நட்பின் பலம் திரும்பவும் கனடாவில் சேர்த்து வைத்துவிட்டது. சிறிது காலம் உடல்நலம் குன்றியிருந்தபோதும்கூட அவர் தொலைபேசியில் அடிக்கடி உரையாடத் தவறுவதில்லை.

நண்பர்களுக்கு அவர் ஓர் ஒளிவிளக்கு. நண்பர்களுடன் கூடி மகிழ்வதிலும் நண்பர்களை உபசரித்து மகிழ்விப்பதிலும் அவருக்கு இணை அவரே தான். அவர் இருக்குமிடம் எப்போதும் கலகலப்பாகவே இருக்கும். அரச சேவையில் இருக்கும் காலத்திலும் இளைப்பாறிய பின்னரும் கூட எவர் எவ்விதமான உதவிகள் கோரி வந்தாலும் மனம் கோணாது சந்தோசத்துடன் அவற்றை நிறைவேற்றி அனுப்பி வைப்பார். தனக்கென வாழாப் பிறர்க்குரியனாகவே வாழ்ந்தவர்.

அன்னார் இன்று எம்மிடையே இல்லையென்னும்போது துயரம் மேலிடத்தான் செய்கிறது. பரமன் பெயரைத்தாங்கிய அன்பர், பரமனின் அணைப்பில் சாந்தி பெறுகிறார் என நம்பி ஆறுதலடைவோம்.

நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

என்றும் நீங்காத நினைவுகளுடன்
ந. மகேந்திராஜா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**MR. P. PARAMALINGAM - A GENTLEMAN WHO RESPECTED OTHERS, AND EARNED THE RESPECT AND AFFECTION FROM THEM.**

It is with deep sorrow that we record the passing away of Ponnampalam Paramalingam - better known as Param to his erst while friends and colleagues.

I first came to know Mr. Paramalingam in the early nineteen fifties when we were working in the Education Department, Colombo under the same roof. He was working in the Pensions Branch and I was in the adjoining Accounts Branch. We used to see and greet each other every day. He had very pleasant ways about him. He did his work efficiently and helped a good number of teachers and others who retired, to draw their pensions quickly by promptly processing their pension papers and earned their respect and gratitude.

In the year 1961, the Education Department was decentralised and we got a chance of going to or near our home stations. Mr.Paramalingam went to work in the Provincial Education Office in Jaffna, and I was sent to a newly opened District Education Office in Vavuniya.

When I got a transfer to Jaffna in 1964, Mr. Paramalingam and few others had gone back to Colombo. Occasionally I used to go to the Education Ministry to attend conferences, and I used to have the pleasure of meeting Mr. Paramalingam there and having a chat with him over a cup of tea in the canteen. He was attached to the assisted schools branch and was very helpful to many parents who wanted admission for their children to leading assisted schools in Colombo. Later he was selected to the Confidential Branch of the Examinations Department, as an Investigating officer.

I was transferred to the Health Ministry in 1967 and we lost touch of each other thereafter.

I came to Canada after nearly 30 years and when he came to know that I had come to Canada, he came to see me with another of my good friend Mr.Aloy Ratnasingham to welcome me to Canada. He used to keep in contact with me on the telephone very often till about a month before he passed away when he told me about his condition. It pains me that I was not able to see him before he passed away because of my sickness.

My heart goes out in sympathy to his beloved wife and his children, all three of whom, he had the well-deserved good fortune of seeing well established in life. It is my fervent hope that the knowledge that we too mourn in his loss, would be of solace to his beloved wife and children, in this time of grief. May he attain eternal rest.

V.S.S.Augustine
(Retired A.G.A)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனதருமை நண்பன்
## பொன்னம்பலம் பரமலிங்கம்

எனதருமை நண்பர் பொன்னம்பலம் பரமலிங்கம் அவர்கள் கனடாவில் அமரத்துவம் அடைந்துவிட்டாரென பத்திரிகை மூலம் அறிந்தேன்.பெரிய அதிர்ச்சியும் கவலையும் அடைந்தேன்.திரு பரமலிங்கம் அவர்கள் சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரியில் 1946 ம் ஆண்டு ஆறாம் வகுப்பிலிருந்து என்னுடன் கல்வி கற்று வந்தார். எஸ்.எஸ்.சி. பரீட்சையில் சித்தியடைந்து பின் 1952 ம் ஆண்டு முதல் நாங்கள் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் பல்கலைக்கழகம் புகமுன் ஒரே வகுப்பில் கல்வி கற்று வந்தோம். இக்கால கட்டத்தில் அவர் இலங்கைப் பொது எழுது வினைஞர் சேவைக்கான தேர்வுப்பரீட்சையில் சித்தி பெற்று எழுதுவினைஞர் சேவையில் சேர்ந்தார்.இச் சேவையில் தனது திறமையால் விசேட தரத்திற்கு பதவி உயர்வு பெற்று நம்பிக்கைக்குரிய ஒரு பொறுப்பதிகாரியாக கடமையாற்றி எல்லோரினதும் பெருமதிப்பைப் பெற்றார்.

பல ஆண்டுகளாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்காக பல பொதுப்பரீட்சைக்கான வினாத்தாள்களை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்தும், பின்னர் அவற்றின் விடைத்தாள்களைத் திரும்பவும் கொழும்புக்கு எடுத்துச் செல்லும் பொறுப்பான பணியில் பரமலிங்கம் அவர்கள் முக்கிய பங்கெடுத்தார்.

திரு. பரமலிங்கம் அவர்கள் தனது நண்பர்களிடம் அதிக அன்பும் மதிப்பும் கொண்டிருந்தார். அவர் கொழும்பில் "டிக்மன்ஸ்" வீதியில் உள்ள வீட்டில் வகித்து வந்த காலத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து அங்கு சென்ற உறவினர்கள் நண்பர்கள் பலருக்கு தங்கும் வசதி அளித்து உபசரித்து வந்தார்.

உற்சாகமும் சுறுசுறுப்பும் உயர் பண்புமுள்ள பரமலிங்கம் அவர்களின் சடுதியமன மறைவு அவருடன் பழகிய எல்லோரையும் கவலையில் ஆழ்த்தியுள்ளது.அவர்களின் இழப்பு நம் எல்லோருக்கும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். அன்னாரின் பிரிவால் துயரும் அவரது அன்பு மனைவி,பிள்ளைகள்,உறவினர்கள் யாவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியைபெற எல்லாம் வல்ல இறைவனைப் பிராத்திபெற எல்லாம் வல்ல இறைவனைப் பிராத்திக்கின்றோம்.

நண்பன் பொ.செல்வரத்தினம்
(ஓய்வு பெற்ற உப அதிபர்)
சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனிய நண்பர் பரமலிங்கத்தின் நினைவுகள்

என் அன்பிற்கு உரிய இனிய நண்பன் பரமலிங்கம் இறைபதம் அடைந்த துன்பச் செய்தியை 21-01-2002 உதயன் பத்திரிகையில் படித்து அதிர்ச்சியும் பதட்டமும் அடைந்தேன். அவர் என்னிடம் மட்டுமல்ல எனது குடும்பத்தினர் எல்லோருடனும் மிகவும் அன்பாக நெருங்கிப் பழகிய அன்பர். எனது மனைவியும் மகளும் இச் செய்தியைக் கேட்டுத் துடித்தார்கள். நான் என் செய்வது என்று தெரியாது மனம் கலங்கி எங்கள் நண்பன் திரு. செல்வரத்தினம் அவர்களுடன் அமரரின் சுழிபுர இல்லத்திற்கு விரைந்தேன். அங்கு அவரின் சகோதரர் திரு.கார்த்திகேசு, மைத்துனர் திரு. துரைசிங்கம் மற்றும் அவர் குடும்பத்தினர் உடன் முன்னைய அவரின் செயற்பாடுகளை நினைவு கூரி மனச்சாந்தி அடைந்தேன்.

1957ம் ஆண்டு முதல் அவரைச் சந்திக்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது.பின்பு யாழ் கல்வித் திணைக்களத்தில் நாம் ஒன்றாக வேலை செய்யும் வாய்ப்பினால் அவருடன் மிகவும் அன்னிய உன்னியமாகப் பழகி, அவரின் பல குணநலங்களை அறிய முடிந்தது. அவரின் கடமை, கண்ணியம், மக்களுக்கு ஆற்றிய சேவை என் மனதில் நின்று அவரின் பண்பை நினைவு கூரச் செய்கிறது.எனது நண்பர்களில் அவர் ஒரு சிறந்த நண்பனாக விளங்கினார். திணைக்களகத்தின் கடமைகளை நாங்கள் சில நாட்களில் இரவு நேரங்களில் அலுவலகத்தில் தங்கி ஆற்றி உள்ளோம். இச் செயலை அப்போதைய ஆசிரியர் குழாம் பாராட்டியது குறிப்பிடத்தக்கது. இது மட்டுமல்ல யாழ் கல்வித் திணைக்களகத்தில் ஒரு விளையாட்டுக்கழகம் அமைக்க வேண்டும் என, அதற்குப் பல கோணங்களிலும் செயற்பட்டு ஸ்தாபித்த செயல் வீரர்களில் ஒருவர் அன்பன் பரமலிங்கம் என்றால் அது மிகையாகாது.

"மனிதன் சேவையே மகேசன் சேவை" என்ற கூற்றிற்கு இணைய அமரர் பல பணிகளைச் செய்து எங்கள் மனதில் நிலைகொண்டுள்ளார். அவரின் பொலிந்த தோற்றம், அன்பு, அறிவு, ஒளி வீசும் கண்கள், புன்முறுவல் தவழும் முகம் இத்தனைக்கும் மத்தியில் அகத்தே கண்டிப்பும் கருணையும் நிறைந்திருந்தன. தாராள சிந்தனையினால், வேற்றுமை இருந்தாலும் ஒற்றுமை கண்டு கருத்து வேறுபாடுகளை முளையிலே களைந்து பகைமையையும் நட்பாக்கும் பண்பிலே சிறந்து சாதனை புரிந்து வெற்றி கண்ட செயல் வீரர்.

கனடாவில் வசிக்கும் நண்பர்கள் அமரருக்கு இறுதி அஞ்சலி செய்திருப்பார்கள் என நம்புகிறேன். இவரை என்றுமே மறக்கமுடியாது.

அமரரின் சாந்திக்கும் அவரின் மனைவி மக்கள் குடும்பத்தினர் அனைவருக்கும் நல்வாழ்வு வாழ வேண்டும் என்றும் மருதடியானைப் பிராத்திக்கின்றேன்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

க.சிதம்பர நடராசா
தலைவர்
மருதடி விநாயகர் ஆலய
தர்மகர்த்தா சபை
தலைவர் மானிப்பாய் மெடிக்கிளினிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேற்றம்

## மரணம் என்று ஒன்றில்லை!

உறவொன்றின் பிரிவால் ஊண்உறக்க மின்றி
உருகியழும் நெஞ்சே ஒன்றுஉணரல் வேண்டும்
மறைவென்றோ இழப்பென்றோ மரண மென்றோ
வையகத்தில் வானகத்தில் எதுவு மில்லை
உறுசடமோ உயிரினமோ எதுவா னாலும்
உருமாறி ஒன்று இன்னொன்று ஆதலன்றி
அறிவியலில் தத்துவத்தில் அவைகள் முற்றாய்
அழிந்துவிடும் எனயாரும் அறிந்த தில்லை!

நாடுமிடம் நண்ணுதற்கு வாக னங்கள்
நம்பிப்பல நாம் ஏறி இறங்கல் போல
வீடுதனை விரைவுடனே அடைவதற்கு
விரும்புகின்ற ஆன்மாவும் வெவ்வே றான
கூடுகளை எடுக்கிறது வேளை கூடக்
குறித்தஇடம் அடைகிறது தேடிக் கொண்ட
நீடுவினைக் கேற்பநிகழ் பயணம் தன்னில்
நிலையற்ற தரிப்பு இந்த நிலப் பிறப்பே!

ஆன்மாவுக் கழிவில்லை வயிற்றில் கொட்டி
அழுவதிலோர் பயனில்லை அதுதான் விட்ட
ஊன்மாவும் அழியாது மூட்டும் தீயால்
உருமாறி ஒருபொழுதில் சாம்பா ராகும்
தான்கொண்ட பயணத்திற் சந்தித் தோரை
சமயத்தில் விட்டேகும் ஆன்மா வுக்காய்
ஏன்வீணே இயமனைப்போய்த் திட்டல் வேண்டும்
இறைவனையும் எடுத்தெறிந்து தூற்றல் வேண்டும்?

துயக்கம் அறும் உண்மைநிலை துலங்கல்கூடும்
சுற்றியுள்ள இயற்கையினை உற்றுப் பார்த்தால்
இயற்கையிலே எதற்குமொரு விதியிருக்கு, ஆம்
எல்லாமே விதிமுறையில் இயங்கல் வேண்டும்
இயற்கையதன் நியதிகளை மாற்றுஞ் சக்தி
எதையுமுணர் மனிதனுக்கோ நிகழும் ஆனால்
எப்பொருளும் முற்றாக அழிவ தில்லை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றத்தை மறைவென்றும் மரணம் என்றும்
மயக்கமனி தன்கூறி மார டிப்பான்
ஏற்றத்தை இறக்கத்தின் மரணம் என்பான்
இரவைப்போய்ப் பகற்பொழுதின் மரணம் என்பான்
தோற்றத்தின் மாற்றங்கள் சுழன்று சுற்றித்
தொடர்கின்ற வாழ்க்கைமுறைச் சுறுசு றுப்பாம்
நேற்று இன்று நாளையிவைக் கப்பால் நிற்கும்
நிகரில்லாச் சக்தியதன் நிர்வ கிப்பாம்!

ஆதலினால் நல்நெஞ்சே அமைதி கொள்வாய்
அன்புறவு விட்டெடன்னை அகன்று மேலாம்
வேதமுதல் வீட்டின்பம் துய்க்கும் வேளை
வேதனைநீ கொள்ளுவது வேண்டா வேலை
பாதைதடு மாறாமல் உலக பந்த
பாசவலை வீழாமல் பகுத்த றிந்து
நீதிநெறி நின்றொழுகி நீயு முந்தன்
நெடும்பயண நேர்வினைகள் முடித்து நிற்பாய்!

கவிஞர் வி. கந்தவனம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எங்கள் ஆர்த்த அன்புக்குரிய குடும்பத் தலைவர்
வானுறையும் தெய்வமாகிய செய்தி கேட்டுக்
கவலை தெரிவித்தும் அவரது இறுதிக் கிரியைகளிற்
கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியும்
மலர் வளையங்களால் மரியாதை செய்தும்
எமது இணையற்ற இழப்பிலும் துயரிலும்
பங்கு கொண்ட உற்றார் உறவினர் நண்பர்கள்
அனைவருக்கும் என்றும் மறவா
நன்றியைத் தெரிவித்துக்
கொள்கின்றோம்.


மேலும் இந்த நினைவுமலருக்கு அஞ்சலி
உரைகள் அனுப்பியவர்களுக்கும் இதனை
உரிய முறையில் உருவாக்குவதற்கு உதவிய
அன்பர்களுக்கும் எமது மனமார்ந்த
நன்றியைக் கூறுகின்றோம்.

இங்ஙனம்
அமரர் பொ. பரமலிங்கம்
அவர்களின்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு.பொன்னம்பலம் பரமலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

905-763-0054
Kulas.

Suriam. 416-283-
3918

avilfar

Viveka Printers, 416-410-6401

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org